## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (31.1.0.2015 முதல் 04.11.2015)

**அறிக்கை எண் 85/2015** **தேதி: 30.10.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (31.10.2015 முதல் 04.11.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 69 முதல் 72 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின ஈரப்பதம் (%) | காற்றின வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 31.10.15 | 2 | 32 | 24 | 5 | 75 | 69 | 10 | வடகிழக்கு |
| 01.11.15 | 20 | 32 | 24 | 5 | 75 | 69 | 10 | வடகிழக்கு |
| 02.11.15 | 9 | 32 | 24 | 5 | 75 | 69 | 10 | வடகிழக்கு |
| 03.11.15 | 20 | 31 | 23 | 6 | 82 | 72 | 10 | வடகிழக்கு |
| 04.11.15 | 15 | 31 | 23 | 6 | 82 | 72 | 10 | வடகிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ சம்பா பருவ நெல்லில் ஒரு ஏக்கருக்கு மேலுரமாக 30 கிலோ யூரியா மற்றும் 8 கிலோ பொட்டாஷ் உரத்தினை 2 செ.மீ நீர் நிறுத்தி அளிக்கவும். மழை பெய்தாலும் 2 நாட்களுக்கு நீரினை வடிக்க வேண்டாம்.
- ✓ மதிய நேரங்களில் அதிக சூரிய ஒளியால் மஞ்சளில் ஏற்படும் சுணக்கத்தை தவிர்க்க பயிர் கழிவு மூடாக்கு மூலம் மண்ணில் ஈரப்பதம் குறையாமல் பாதுகாக்கவும். வரும் பருவத்தில் அகத்தி ஊடுபயிர் செய்து நிழல் ஏற்படுத்தவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் வேகமான காற்றின் காரணமாக வாழை மரங்கள் சாய்வதை தவிர்க்க ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ பசுவில் மடிவீக்க நோயினை தவிர்க்க பால் கறக்கும் முன் பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலில் மடியினை கழுவவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ சம்பா பருவ நெல்லில் ஒரு ஏக்கருக்கு மேலுரமாக 30 கிலோ யூரியா மற்றும் 8 கிலோ பொட்டாஷ் உரத்தினை 2 செ.மீ நீர் நிறுத்தி அளிக்கவும். மழை பெய்தாலும் 2 நாட்களுக்கு நீரினை வடிக்க வேண்டாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**